# பாடங்களுக்கு அறிமுகப்படுத்துதல்

இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொள்ளத் தேவை உள்ளவர்களுக்கு இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களும் இன்றியமையாதவைகளாக உள்ளன. இவைகள் தர்க்க அறிவுமுறைமைப்படியாக ஒன்றிலிருந்து இன்னொரு பாடத்திற்குத் தொடர்ந்து செல்லுகின்றன, மற்றும் இவை இந்தப் பயிற்சி நூலில் அமைவு பெற்றுள்ள வரிசை முறைமையின்படி பயனுள்ள வகையில் பயன் படுத்தப்பட முடியும். இருப்பினும் இவைகளைப் போதிக்கும் ஆசிரியர், படிக்கும் மாணவர் முதல் மூன்று பாடங்களில் உள்ளவற்றை ஏற்கனவே அறிந்து விசுவாசிக்கின்றார் என்பதை உணரலாம், மற்றும் இந்தக் காரணத்தினால் "இரட்சிப்பு" என்பது பற்றிய பாடமான 4-ம் பாடத்தில் இருந்து தொடங்க விரும்பலாம்.

மதம் பற்றிய விஷயங்களின் நுண்ணிய உணர்வுத் தன்மையின் காரணமாக, பின்னாளைய படிப்புகளுக்கு அஸ்திபாரம் போடுகின்றதற்கு உதவும் பாடங்களைக் கொண்டு தொடங்குவது சில வேளைகளில் முக்கியமானதாக உள்ளது. இந்தத் தொடக்கப் பாடங்கள் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஒருவர் கற்றுக் கொள்வதற்கு உதவும் கருத்துக்களைக் கொண்டிராதிருக்கலாம், ஆனால் இவைகள் வேதாகமத்தை அணுகும்முறை பற்றிய கருத்துக்களில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க உதவலாம், இதில் சத்தியங்களின் பின்னணி பற்றிய புரிந்து கொள்ளுதல் இல்லாது போனால் கருத்து வேறுபாடுக்குக் காரணமாகலாம்.

இப்பாடங்களில் எதையும் போதிப்பதற்கு முன்பு, ஆசிரியர் இவைகளை எந்த வரிசைமுறையில் முன்னிறுத்த விரும்புவார் என்பதை அறிவதற்கு அவர் எல்லாப் பாடங்களையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களும் பின்வருமாறு சிந்தனைத் தொடரை மேம்படுத்துகின்றன:

*பாடம் 1. "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது?"* என்ற பாடம், தேவன் தமது நல்ல சிருஷ்டிப்பை சாபத்தின் கீழ் வைப்பதற்குக் காரணமாக ஏதேன் தோட்டத்தில் என்ன நடந்தது என்பதை எடுத்துரைக்கின்றது. ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியும் மரத்திலிருந்து கனியைப் புசித்ததின் மூலமாகப் பாவம் இவ்வுலகில்

நுழைந்தது என்றும் மற்றும் அந்த மரத்திலிருந்து புசித்ததினால் மனித குலமானது நன்மை மற்றும் தீமையின் பிரச்சனைக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. இருப்பினும், பச்சிளம் குழந்தைகள் பாவிகளாய்ப் பிறப்பதில்லை அல்லது அவர்கள் நன்மை தீமை அறியும் அறிவுடன் பிறப்பதும் இல்லை. அவர்கள் இந்த அறிவை வாழ்வின் பிற்பகுதியில் வளர்த்துக் கொள்கின்றார்கள் என்பதையும் இந்தப் பாடத்திலிருந்து ஆசிரியர் காட்ட முடியும்.

*பாடம் 2. ''தேவனுடைய திட்டம் என்ன?''* என்ற பாடம், ஆபிரகாமைப் பெரியதொரு இனமாக்கவும், ஆபிரகாமின் சந்ததி மூலம் பூமியின் (பல்வேறு) இனங்களையும் ஆசீர்வதிக்கவும் தேவன் கொண்டிருந்த திட்டத்தை எடுத்துரைக்கின்றது. தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்க ஒருக்காலும் திட்டமிட்டிருந்ததில்லை (அது ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபத்தையே கொண்டு வந்தது), ஆனால் அதற்கு மாறாக, அவர் வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு முன்பாகவே தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமாக மனித குலத்தை ஆசீர்வதிக்கத் திட்டமிட்டார். மனித குலத்தை இயேசுவிடம் கொண்டு வருதல் என்பது நியாயப்பிரமாணத்தின் நோக்கமாய் இருந்தது, ஆனால் இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வந்துள்ளதால், நாம் இனியும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல. மாறாக நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கின்றோம் என்பதையும் ஆசிரியர் காட்ட முடியும்.

*பாடம் 3. "இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?"* என்ற பாடம் இயேசுவை, மிருக பலியுடன் கூடிய நியாயப்பிரமாணமாக எடுத்துரைக்காமல், மனிதகுலத்தின் இரட்சிப்புக்கான *வழியாக* அவரைப் பற்றி எடுத்துரைக்கின்றது, இந்த *வழியானது* எருசலேமில் பிரசங்கிக்கப் படத் தொடங்கி, உலகின் மற்றெல்லாப் பகுதிகளிலும் பரவியது. சிலுவையில் இயேசுவின் மரணத்திற்கு முன் நிழலாகத் தேவன் மிருக பலிகளை வைக்கத் திட்டமிட்டது எவ்விதம் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். அவரது (இயேசுவின்) மரணத்திற்குப் பிறகு, இந்தப் புதிய வழியானது எருசலேம் தொடங்கி உலகம் முழுவதிலும் பிரசங்கிக்கப்பட முடிந்தது. மன்னிப்பின் வழி என்பதாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட அதே விஷயம் தான் எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலங்களிலும் தேவைப்படுகின்றது.

*பாடம் 4. "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?"* என்ற பாடம், இயேசுவின் இரத்தத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள ஒருவர் செய்ய வேண்டியவை என்ன என்பதை எடுத்துரைக்கின்றது. இயேசுவைப் பற்றிப் போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, இயேசுவுக்காக வாழ முடிவு செய்து, இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டுள்ளவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். இயேசுவின் இரத்தத்தின் மூலமாக வரும் இந்த மன்னிப்பு, கிறிஸ்துவுக்குள்

ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்களுக்குக் கிடைப்பதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற அனைவரும் அவரது ஒரே சரீரமான கிறிஸ்துவின் சபையில் உள்ளனர்.

*பாடம் 5. "கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?"* என்ற பாடம், கிறிஸ்துவின் சபையானது எல்லாக் கிறிஸ்தவர்களையும் கொண்டதாக உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. விசுவாசிகளால் ஆன இந்த சரீரத்தைக் கட்டியெழுப்புபவராக, அஸ்திபாரமாக, தலையாக மற்றும் இரட்சகராக உள்ளவர் இயேசுவே. அவர்களின் மேலான தலை என்ற வகையில் அவர் தமது சரீரமானது ஒருமைப்பட்ட சரீரமாக, பிரிவினை எதுவுமின்றி இணக்கமுள்ளதாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றார். அவர்கள்மீது கொண்ட அன்பினால் அவர்களைத் தமக்கு முன்பாக மாசற்றவர்களாக, கறைதிரை அல்லது அது போன்ற எதுவும் இல்லாதவர்களாக தமக்கு முன்பு பரிசுத்தமும் குற்றமற்றவர்களுமாய் நிலைநிறுத்திக் கொள்வதற்காக அவர்களுக்காக அவர் மரித்தார்.

*பாடம் 6. "கிறிஸ்துவின் சபையினுடைய நிறுவன அமைப்பு எப்படியிருந்தது?"* என்ற பாடம் சபையின் என்றும் மாறாத நிறுவன அமைப்பைக் காண்பிக்கின்றது, இதில் இயேசு தலைவராக மற்றும் ஆதி அப்போஸ்தலர்கள் பன்னிருவரும் மற்றும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் உள்ளனர். பிராந்திய சபையில் மூப்பர்கள் (ஆயர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் அறியப்படுபவர்கள்), உதவிக்காரர்கள், சுவிசேஷ ஊழியர்கள், போதகர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் ஊழியம் செய்கின்றனர். இவர்கள் யாவரும் தங்களுக்கு ஏற்புடைய பணிகளையும் தகுதிகளையும் கொண்டுள்ளனர்.

*பாடம் 7. "நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?"* என்ற பாடம், தேவனுக்கு ஏறெடுக்கும் ஆராதனையில் அவர் விரும்பும் செயல்களை எடுத்துரைக்கின்றது. தேவனை ஆவியிலும் உண்மையிலும் ஆராதிப்பது என்ற முறையில் அவர் ஏற்றுக்கொள்ளும் ஆராதனையைச் செய்யும்படி சபையார் நாட வேண்டும் என்று ஆசிரியர் காண்பிக்க முடியும். ஆராதனையில் தேவன் விரும்புகின்றவைகளை அவர் நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் செய்யும்படி அறிவுறுத்தியுள்ளவற்றில் இருந்து ஒன்றையும் எடுத்துப் போடவோ, அல்லது அவற்றுடன் ஒன்றையும் கூட்டவோ கூடாது என்று அவர் நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

*பாடம் 8. "உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?"* என்ற பாடம், மன்னிக்கப்படாத பாவிகள் மற்றும் மன்னிக்கப்பட்ட பாவிகள் என்ற இருவகை மக்கள் மட்டுமே உள்ளனர் என்று எடுத்துரைக்கின்றது. தேவனுடைய தர அளவைகள் எல்லாராலும் மீறப்பட்டுள்ள காரணத்தால் எல்லாரும் பாவிகளாகவே இருக்கின்றோம். மன்னிக்கப்படாத பாவிகளின் அடைவிடம் என்பது பெருந்துன்பம் உடையதாக, நித்திய தண்டனைக்குரியதாக இருக்கையில், மன்னிக்கப்பட்ட பாவிகளின் அடைவிடம் என்பது பரலோகத்தில் தேவனுடன் நித்திய பேரின்பத்தில் திளைப்பதாக இருக்கும். தேவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் மன்னிக்கப்படுகின்றனர், மற்றும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் மன்னிக்கப்படாதவர்களாய்

இருக்கின்றனர். தேவனுடைய சித்தத்திற்கு மனித குலத்தின் பதில் செயலைப் பொறுத்தே மனித குலத்தின் நித்திய அடைவிடம் நிர்ணயிக்கப்படும்.

## யோசனைகள்

தக்க வகையில் புரிந்து கொள்ளப்பட்டு, எடுத்துரைக்கப்படும் பொழுது, இந்த எட்டுப் பாடங்களும் ஒரு மாணவர் தம்முடைய இரட்சிப்பு இயேசுவைச் சார்ந்துள்ளது என்று உணர்ந்தறியச் செய்வதுடன், தாம் அவர் மீது விசுவாசத்துடனும் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலுடனும் வாழ வேண்டும் என்பதையும் மாணவர் உணரச் செய்கின்றன. இயேசுவின் அதிகாரம், தேவனுடைய கிருபை, தேவனுடைய அன்பு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்ற வகையில் கனப்படுத்துதல் மற்றும் இயேசுவுடன் தனிப்பட்ட வகையில் உறவு கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்தாத எந்த ஒரு எடுத்துரைப்பும் இந்தப் பாடங்களை முன் வைக்கையில் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய இலக்குகளில் குறைவுபடும்.

ஆசிரியர் இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள எட்டுப் பாடங்களையும் நன்கு அறிந்த பிறகு அவர் தாம் எடுத்துரைக்கப் போகும் பாடத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். அவர் பாடம் முழுவதையும் வாசித்து அதில் உள்ள எல்லாக் கருத்துக்களையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பாடத்தில் உள்ள வேத வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் எடுத்து அவை எவ்விதத்தில் பாடத்திற்கு ஏற்புடையவைகளாய் உள்ளன என்பதை அவர் அறிய வேண்டும். இதைச் செய்த பிறகு, அவர் பாடத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் எவ்விதம் எடுத்துரைப்பது என்று சிந்திக்கத் தயாராகின்றார்.

ஒவ்வொரு பாடத்திற்கும் ஆசிரியர் தம்மைத் தயாரிக்கவும், எடுத்துரைக்கவும் அடுத்து வரும் கருத்துக்கள் தரப்படுகின்றன. இந்த *ஆசிரியர் வழிகாட்டி* நூலில் உள்ள ஆலோசனைப்படி கருத்துக்களை அப்படியே பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஆனால் ஒவ்வொரு பாடத்தையும் எடுத்துரைக்குமுன்பு ஆசிரியர் இந்த *வழிகாட்டி* நூலில் உள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்ள நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.